2018 ஜூன் 26]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

மின் மாற்றி

***13132—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிபாக்கம் ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி, மங்கம்மாப்பேட்டை காலனியில் 100 KVA மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றார். 20–12–2017 அன்று 100 KVA மின்மாற்றி ஒன்று கூடுதலாக நிறுவப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா; ஏழை தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்; "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என வாழ்ந்து மறைந்தவர் புரட்சித் தலைவி அம்மா ஆகியோர்களின் வழியில் இன்றைக்கு ஆட்சியையும், கட்சியையும் வழி நடத்திச் செல்கின்ற எளிமையின் சிகரம்*

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) பொறுமையின் சிகரம் மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். தமிழகத்தை மின் மிகை மாநிலமாக உருவாக்கி மறைந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்றையதினம் தமிழகத்தை மின் மிகை மாநிலமாகவே உருவாக்கி, சிறப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் வழிநடத்தி வரும் இந்த வேளையிலே, அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட வடமாம்பாக்கம் ஊராட்சி, மங்கம்மாப்பேட்டை கிராமத்திலே ஒரு மின்மாற்றி அமைக்க வேண்டுமென்று கேள்வி கேட்டவுடனே உடனடியாக கூடுதலாக மின்மாற்றி அமைத்துத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவு கலந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, வேகமாக கேள்வியைக் கேளுங்கள். மிகவும் slow ஆக Goods வண்டி போல போகிறீர்கள். (சிரிப்பு)

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே வேளையில் அரக்கோணம் நகரத்தின் மையப் பகுதியான விண்டர்பேட்டையில் மிகப் பழைமையான 33 KV துணை மின் நிலையம் இருந்து வருகிறது. அந்த 33 KV துணை மின் நிலையத்தை 110 KV துணை மின் நிலையமாகத் தரமுயர்த்தித் தர வேண்டும் என்று மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வருகின்றனர். நானும் இந்த அவையிலே அந்த 33 KV துணை மின் நிலையத்தை 110 KV துணை மின் நிலையமாக தரமுயர்த்தித் தர வேண்டும், அதற்கு இட வசதியும் பக்கத்திலே இருக்கிறது என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். எனவே, அந்த விண்டர்பேட்டையில் உள்ள 33 KV துணை மின் நிலையத்தை 110 KV துணை மின் நிலையமாகத் தரமுயர்த்தித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 26]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் மின்னழுத்தம் அதிகமாக இருந்தால் மட்டும்தான் புதிய துணை மின் நிலையம் அமைக்க முடியும். இப்பொழுது மொத்தம் 264 மின் இணைப்புகள் மட்டுமே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதால்தான் 100 K.V.A. மின்மாற்றி ஒன்றைக் கூடுதலாக வைத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதி வளர்ந்து வருகின்ற பகுதியாக இருந்தால் பிற்காலத்தில் தேவையிருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாநகரத்தில் 30 சதவிகிதம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிற சிப்காட் உப மின் நிலையத்தோடு இணைக்கப்பட்ட மின்மாற்றி 22 K.V.A. தற்போது முழுமையாகப் பழுதடைந்து விட்டதால், 2 மணி நேரம் அறிவிக்கப்படாத மின்தடை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, அவசர முக்கியத்துவம் கருதி அந்த மின்மாற்றியை மாற்றித் தருமாறும் அல்லது சரி செய்து தருமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு குடிதண்ணீருக்கெல்லாம் மின்மாற்றிகள் வேண்டுமென்று கடந்த முறை சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க உடனடியாக வழங்கப்பட்டது. மாண்புமிகு*

[2018 ஜூன் 26

உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த சிப்காட் பகுதியில் இருக்கின்ற மின்மாற்றி பழுதாகிவிட்டது. அதனால், அங்கே மின்தடை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அது எங்கள் கவனத்திற்கு வரவில்லை. அப்படி இருந்தாலும்கூட back feed என்கின்ற பின்வழியாக அதற்கு மின் இணைப்பு கொடுத்திருப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற காரணம் உண்மையாக இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உரிய தகவலை நான் நேரடியாகவே சொல்லிவிடுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மின் இணைப்பு கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதை தட்கல் முறை என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், இன்னும் அரசிடமிருந்து அதற்குரிய G.O. கிடைக்கவில்லை. கூடிய விரைவில் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆண்டிற்குத் தேவையான தட்கல் system–ஐக் கேட்கின்றார்கள். கடந்த ஆண்டு அறிவித்து, 6–9–2017 வரை பதிவு செய்தவர்களுக்கெல்லாம் 10,000 connections உடனடியாகக் கொடுக்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டும் தொடர்ந்து 10,000 இணைப்புகள் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றோம். அது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கின்றது. இன்னும் ஒரு வார காலத்திற்குள் அதற்குண்டான அரசாணை வெளியிடப்பட்டு, கிட்டத்தட்ட ஜூலை முதல் வாரத்திலிருந்து அதை நடைமுறைப்படுத்தி தட்கல் முறையில் மின் இணைப்பைக் கொடுப்பதற்குண்டான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத்

2018 ஜூன் 26]

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில்* sub–stations *அமைப்பதற்கு இடம் கிடைப்பது இல்லை. அரசு குறைந்த விலை கொடுக்கின்ற காரணத்தால் விவசாயிகள் நிலத்தைக் கொடுக்க முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே, அதற்கு மனமுவந்து நிலத்தைக் கொடுப்பவர்களுக்கு, இலவச மின்சாரம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுமா? அதேபோல* tower *அமைத்து மின் கம்பிகளைக் கொண்டு வருகின்றபோது* tower *அமைப்பதற்கு நிலம் கொடுப்பவர்களுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதில் முன்னுரிமை கொடுத்தால் நாங்கள் வழங்கத் தயாராக இருக்கிறோம் என்று பல விவசாயிகள் சொல்கிறார்கள். ஆகவே, நிலம் தருபவர்களுக்கு பம்ப் செட்டுக்கு இலவச மின்சாரத்தை முன்னுரிமை அடிப்படையில் வழங்கி, விவசாயிகளிடம் அந்த இடத்தைப் பெற்று,* sub–stations *அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? திருவண்ணாமலை, விவசாயிகள் நிறைந்த மாவட்டம். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் உடனடியாக வழங்கி, இடத்தைப் பெற்று,* sub–stations *மற்றும் டவர் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இரண்டு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். துணை மின் நிலையம் அமைப்பதற்கும்,* tower *போடுவதற்கும் நிலம் தருபவர்களுக்கு இலவச மின் இணைப்பு தரப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள்.*

Tower *வருகின்ற அந்தப் பகுதியில் ஒரு விவசாயிக்கு ஒரு மின் இணைப்பு கொடுப்பதாக கொள்கை முடிவு எடுத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் தருபவர்களுக்கும் இலவச மின் இணைப்பு முன்னுரிமை அடிப்படையிலே கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின்*

கவனத்திற்குக் கொண்டு சென்று அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன், tower இருக்கின்ற பகுதியில் யாராவது ஒரு விவசாயி—ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் இருக்கிறது என்று சொன்னால், அந்த tower மட்டும் போகின்ற இடத்திற்கு ஒரு விவசாயிக்கு இலவச மின் இணைப்பு கொடுப்பதற்கு ஏற்கெனவே அரசு கொள்கை முடிவெடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரிமுனையில் இருக்கின்ற பகுதிகளில் 33/11 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு ஏற்கெனவே அரசுக்கு அனுப்பப்பட்டு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அந்த இடம் காவல் நிலையம் சொந்தமான இடம் என்பதால், அந்தக் காவல் நிலையம் ஏற்கெனவே வண்ணாரப்பேட்டை பகுதியில் உள்ள மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடத்திற்கு மாற்றித் தரப்பட்டுள்ளது. இந்தக் கேள்வியை 6 மாதங்களுக்கு முன்பாகவே இந்த அவையில் நான் எழுப்பியபோது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்று அறிவித்தார். அதை மீண்டும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்து, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் ஏற்படுகின்ற மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு உடனடியாக அந்த இடத்திலே 33/11 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்துத் தருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றார். நான் அரசுக்கு

2018 ஜூன் 26]

அனுப்பப்பட்ட அந்தக் கோப்பினை ஆய்வு செய்தபோது, அந்த இடம் இன்னும் முழுமையாக மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்படவில்லை என்ற காரணத்தினால் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இதுகாறும் இல்லாத அளவிற்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் சென்னை மாநகரத்தில் மட்டுமே 28 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடன் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு பேசும்போதுகூட இதைப் பற்றிச் சொன்னார்கள். இதுகுறித்து ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறேன். இன்னும் ஒரு வார காலத்திற்குள் அந்தப் பணி முடிவடைந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடம் மின்சார வாரியத்திற்கு வந்தவுடன் உடனடியாக அதற்கான பணிகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், எப்போது அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவதற்கு முன்பாகவே, ஒரு வார காலத்திற்குள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், ஆலப்பட்டியில் 33/11 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் ஏராளமான விவசாய பம்புசெட்டுகள் இருக்கின்ற காரணத்தினால் மிகக் குறைந்த மின்னழுத்தமே இருக்கின்ற சூழ்நிலையில், அந்த மின்மாற்றியை அகற்றிவிட்டு 110 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியாக அதைத் தரமுயர்த்தித் தர வேண்டும் என்று நான் ஏற்கெனவே கேட்டிருந்தேன். கடந்த 7 வருடங்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ** பார்க்காமல் இப்போதாவது அதை செய்து கொடுப்பீர்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள் என்றால், ஏன் ** என்று சொல்கிறீர்கள்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் மின்சாரத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கடந்த 7 ஆண்டு காலமாகக் கேட்டுவருவதாக தவறான ஒரு தகவலைச் சொல்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வதெல்லாம், எதிர்க்கட்சி உறுப்பினர், ஆளுங்கட்சி உறுப்பினர் என்று நாங்கள் எப்பொழுதுமே பார்ப்பதில்லை. மக்களை மட்டும்தான் நாங்கள் பார்க்கின்றோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இத்தனை பேர் கேட்டார்கள். இதுபோன்று எந்தெந்தப் பகுதிகளில் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றனவோ மின்மாற்றிகளை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். இதற்கு முன்புகூட மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் குடிதண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது; அதற்காக மின்மாற்றிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். உடனே அரசு அதிகாரிகள்மூலம் அங்கு ஆய்வு செய்து, புதிய மின்மாற்றிகளை வழங்கியிருக்கின்றோம். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய மின்மாற்றி அமைத்துத் தர வேண்டும் என்று இப்போதுதான் என்னிடம் சொல்லியிருக்கின்றார். நான் ஞாயிற்றுக்கிழமையன்று அந்தப் பகுதிக்கு வரவிருக்கிறேன். அப்போது, அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அவ்வாறு குறைந்த மின்னழுத்தம் இருந்தால் அதை உடனடியாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.